18th February 1959]

(c) the number of deaths in case of—

(i) persons;

(ii) cattle;

(d) the steps taken—

(i) to prevent the further spreading of this disease; and

(ii) to cure the affected persons and cattle.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No cattle disease is affecting the cattle in a virulant form in Perambalur area, Tiruchirappalli district excepting an attack of Anthrax among sheep and goats in Kilamathur village (Kudikadu).

(b) Only two of human Anthrax have occurred.

(c) (i) Nil.

(ii) Sixty-five sheep and goats.

(d) (i) Men and materials were at once rushed to the spot by the District Veterinary Officer, Ariyalur. The mobile motor van was also made to tour in the affected areas. Seven thousand, six hundred and fifty-eight sheep and goats were vaccinated, Health Inspector and the District Health Officer also immediately visited the areas and instituted control and preventive measures.

(ii) Health Department made a propaganda about the necessity for the isolation of every sick animal. The people were advised to remove the carcases of dead animals without cutting and to bury the same in one foot of lime and also to disinfect all articles used in handling the animals. Skinning of dead bodies of animals and in any way cutting them or eating the flesh of these were prohibited. The Veterinary Assistant Surgeon also toured the affected areas and did propaganda. No animals were ailing at the time of his visit. Arrangements have also been made for mass vaccination in the event of fresh outbreak.

Artificial Insemination Centre

* 459 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of artificial insemination centres established in the Madurai district; and

(b) how many more are to be opened in the said district during the Second Five-Year Plan period?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) There are 11 Artificial Insemination Centres in Madurai district.

(b) The number of centres to be opened in the Madurai district during the years 1959–60 and 1960–61 has not yet been decided.

[18th February 1959

SRI V. SANKARAN : இந்த முறை திருப்திகரமான பலன் அளித்துள்ளதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : திருப்திகரமான பலன் அளித்துக்கொண்டுதான் இருக்கிறது. அதனுல்தான் மேலும் மேலும் இந்த மாதிரியான நிலையங்கள் வேண்டுமென்று மக்கள் கோரு கிருர்கள்.

SRI P. S. CHINNADURAI: கனம் சபாநாயகர் அவர்களே, 459-வது கேள்வியும் அதற்குக் கொடுக்கப்பட்ட பதிலும் கூடமாக இருக் கின்றன. எனவே அவைகளை கனம் அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டு மென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் கேள்விதான் எனக்குப் புரியவில்லை.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த மூலக் கேள்வி பொதுப்படையாக இருக்கிறது. இந்தக் கேள்வி கால்நடைகள் சம்பந்தமாக மட்டும் போடப்பட்டிருக்கிறதா ? அல்லது இது கால் கை நடைகள் சம் பந்தமாகவும் போடப்பட்டிருக்கிறதா கேள்வி இரண்டையும் உட்படுத்து கிறதா ? (சிரிப்பு).

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினருக்கே இது தெரியும். கனம் அங்கத்தினர் ஏதாவது புதிய விசேஷ யோசனை கொடுக்கப் பிரியப்பட்டால் அதைக் கொடுக்கலாம். (சிரிப்பு).

Beedi Industry

*460 *Q*.— SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri D. S. Authimoolam) : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) பீடித் தொழில் விஷயமாக ஏற்படுத்திய (Minimum Wages) கமிட்டி அதனுடைய ரிப்போர்ட்டை சமர்ப்பித்துவிட்டதா ?

(ஆ) அதன்பேரில் எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) ஆம். சமர்ப்பித்து விட்டது.

(ஆ) கமிட்டியினுடைய ரிப்போர்ட்டு இப்பொழுது சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM : ரிப்போர்ட் சர்க்கார் கைக்கு வந்து எவ்வளவு நாட்கள் ஆகின்றன ? இதன் மீது முடிவெடுக்க இன்னும் எவ்வளவு காலம் ஆகும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : குறைந்த பட்சம் கூலியை நிர்ணயிக்கும்போது பக்கத்தில் உள்ள ராஜ்யங்களுடன் கலந்தாலோசித்து அதை நிர்ணயிக்க வேண்டும் என்று மத்திய சர்க்கார் கேட்டுக்கொண்டிருக் கிருர்கள். அவ்வாறே அண்டை ராஜ்யங்களுடன் கலந்தாலோசிக்கப்படு வதால் நான்கு மாத தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

SRI S. PAKKIRISAMI PILLAI : பீடித் தொழிலாளர்களுக்கான சட்டத்தை அகில இந்திய ரீதியில் கொண்டு வர வேண்டுமென்று சமீபத்தில் மகாநாடு போடப்பட்டது. அந்தக் கூட்டத்தின் முடிவு என்ன என்று கனம் அமைச்சர் சொல்வாரா?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்தக் கேள்வியைப் பார்லிமெண்டில்தான் போடவேண்டும். இந்த விஷயம் எனக்குத் தெரியாது.